கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார். நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் என்.ஏ.அய்யூப் அலி, சுள்ளான் எஸ்.ராஜேந்திரன், வட்ட செயலாளர் பூபதி டோமினிக் பாஷா, லாரன்ஸ், முத்து பாவா, அமானுல்லா, டைட்டஸ் அசன், வினோத், இர்பான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கரூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட மோகனூர்வாங்கல் சாலை முதல் வெங்கமேடுகாமதேனு நகர் வழியாக சேலம் பழைய நெடுஞ்சாலை வரை இணைக்கும் வகையில், ரூ. 13 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலையை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்து போக்குவரத்தை துவக்கி வைத்தார். இதில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா, கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், அன்பரசு, சக்திவேல், ஆர்.எஸ்.ராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கோவை கவுண்டம்பாளையத்தில்

மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி!

அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி - ஆர்.காந்தி தொடங்கி வைத்தனர்!

கோவை, டிச.29- கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் கல்பனா கல்யாண மண்டபத்தில் நேற்று முன்தினம் (27.12.2024) மாநில அளவிலான கைத்தறி கண்காட்சியின் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் முதல் விற்பனையை துவக்கி வைத்து, கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலர் திருமதி.வே.அமுதவல்லி, கைத்தறித்துறை இயக்குநர் அ.சண்முகசுந்தரம், இணை இயக்குநர் ப. மாதேஸ்வரன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், துணை மேயர் ரா. வெற்றிச்செல்வன், மாமன்ற உறுப்பினர் திருமதி. ப.வே.சுபஸ்ரீ, கைத்தறி துறை உதவி இயக்குநர் கொ.வெற்றிவேல் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

நடப்பாண்டில் திருச்சி. கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய 4 சரகங்களில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்த திட்டமிடப்பட்டு இன்று கோயம்புத்தூரில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. இக்கண்காட்சி 27.12.2024 10.01.2025 வரை நடைபெறும். இக்கண்காட்சியில் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலுள்ள 113 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பங்கு பெற்று 60 அரங்குகள் அமைத்து சுமார் ரூ.5 கோடி மதிப்பிலான கைத்தறி துணி இரகங்களை விற்பனைக்கு வைத்துள்ளன. இக்கண்காட்சி மூலம் ரூ.3.50 கோடி அளவிற்கு விற்பனை எதிர்நோக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பரந்த எண்ணிக்கையிலான கைத்தறி இரகங்கள் அவற்றின் சிறந்த கைவினைத்திறன் மற்றும் தனித்துவத்திற்காக உலகளவில் புகழ் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், திருபுவனம் பட்டுச் சேலைகள் ஆரணி பட்டுச் சேலைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்கடிச் சேலைகள் கோயம்புத்தூர் கோரா காட்டன் சேலைகள், பரமக்குடி சேலைகள், சேலம் வெண் பட்டு வேட்டிகள், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும்வீட்டு உபயோக துணி இரகங்கள் போன்ற கைத்தறி இரகங்கள் தனித்துவ வேலைப்பாடு மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகளுக்கு பெயர் பெற்றதாகும்.

2023-2024 ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.1091.93 கோடி மதிப்பில் கைத்தறித் துணி இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1241.99 கோடிக்கு விற்பனை செய்துள்ளன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வெளிச்சந்தை மற்றும் கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தி திட்டத்திற்குத் தேவையான துணிகளை உற்பத்தி செய்கின்றன. இது தவிர பள்ளிக் கல்வித் துறையின் சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் வருவாய் துறைக்கு தேவையான துணிகளையும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

நெசவாளர்கள் ஊக்குவிப்பு!

கைத்தறி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், உயர்ந்து வரும் சந்தை நிலவரத்தினை கருத்தில் கொண்டும் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறி நெசவு தொழில் ஈடுபடும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலியில் அவ்வப்போது அடிப்படைக்கூலி மற்றும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெறும் நடைமுறை மூலதன கடன் தொகைக்கான வட்டியில் சதவீதம் வட்டி மானியம் (interest Subsidy) சங்கங்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக அரசு ரூ. 14.73 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் இது வரை கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.29.04 கோடி மதிப்பில் 30.227 தறிகள் மற்றும் தறி உபகரணங்களும் (Looms and Accessories) மற்றும் 434 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ 30 கோடி நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது

ஆரணி பகுதியில் 5000 பட்டு நெசவாளர் பயன் பெறும் வகையில் 2053 ஏக நிலப்பரப்பில் ரூ 44 கோடி செலவில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா (Handloom Silk Park நிறுவப்படவுள்ளது. நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் (Weavers Mudra Scheme) கடந்த 3 ஆண்டுகளில், 37,455 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ 191.67 கோடி வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளது இந்தியாவிலேயே. தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை மாநிலமாக செயல்படுத்தி வருகிறது.

மாதாந்திர ஓய்வூதியம்!

கைத்தறி நெசவாளர்களுக்கு மாதாந்திர முதியோர் ஓய்வூதியத் தொகை மற்றும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.1000/- லிருந்து ரூ.1200/- ஆக 01.08.2023 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்கள் சேமிப்புத் தொகை முழுவதையும் பெறுவதற்கான கால அளவினை 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக 05.07.2023 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

2021-2022 முதல் 2024-2025 ஆம் ஆண்டு 16:12.2024 முடிய ரூ.821.78 கோடி தள்ளுபடி மானியம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ ஆப்டெக்ஸ்-க்கு விடுவித்துள்ளது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதத்திற்கு முறையே 200 அலகுகள் மற்றும் 750 அலகுகள் மின்சாரம் என்பதை 03.03.2023 முதல் முறையே 300 அலகுகளாகவும், 1000 அலகுகளாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 75,364 கைத்தறி நெசவாளர்களும் விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர் 1,62,799 விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி வீடு இவ்லாமல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி. நகர்ப்புற மற்றும் ஊர்க நெசவாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வரையில் நகர்ப்புறம் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 1950 கைத்தறி நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 833 கைத்தறி நெசவாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் பணி ஆணை வழங்கப்பட்டு இதுவரையில் 695 பயனாளிகளுக்கு ரூ.17.85 கோடி மானியத் தொகையாக விடுவிக்கப் பட்டுள்ளது. இதில் 346 பயனாளிகள் வீடுகளை முழுவமாக கட்டியுள்ளனர். எஞ்சியுள்ள 1117 பயனாளிகளின் தகுதியின் அடிப்படையில் விரைவில் பணி ஆணை வழங்கப்பட உள்ளது.

கலைஞரின் கனவு இல்லம்!

மேலும் கிராமப் புறத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் AWASS PLUS பட்டியலில் இடம் பெற்ற தகுதியான 22 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது மேலும் கிராமப்புறத் தில் Awaas Plus பட்டியலில் இடம் பெறாத பயனாளிகளில் "கலைஞரின் கனவு இல்லம்" என்ற திட்டத்தின்கீழ் 2392 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக அரசு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

2023-2024 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் 2 மாநில அளவிலான கைத்தறிக் கண்காட்சியும், பரமக்குடி மற்றும் கடலூரில் 2 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சியும் நடத்தப்பட்டு இக்கண்காட்சிகளில் ரூ. 6.56 கோடி மதிப்பில் கைத்தறித் தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மேலும், இவ்விழாவில் நெசவாளர் குழும நலத்திட்டம், கைத்தறி ஆதரவுத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 10 கைத்தறி நெசவாளர்களுக்கு தறி உபகரணங்களும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளும், நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் 11 நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் ஒப்பளிப்பு ஆணைகளை மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் வழங்கினார்கள்.

காவல் உதவி செயலியை தங்கள் செல்போனில்

மாணவிகள் பதிவிறக்கம் செய்ய வேண்டும்!

கல்லூரிகளுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் வேண்டுகோள்!

சென்னை, டிச.29- மாணவிகள் காவல் உதவி செயலியை தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்வதை அனைத்துக் கல்லூரிகளும் உறுதி செய்ய வேண்டும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், ஆபத்துக் காலங்களில் உடனடியாக காவல்துறையை தொடர்புகொள்ள உதவும் 'காவல் உதவி' செயலியை அனைத்துப் பெண்களும் குறிப்பாக மாணவிகள் தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

அவசர காலங்களில் சிவப்பு நிற `அவசரம்' என்ற பொத்தானை அழுத்துவதன் மூலமாக, பயனாளர் விவரம், தற்போதைய இருப்பிட விவரம் மற்றும் வீடியோ, கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு காவல்துறையின் அவசர சேவை வழங்கப்படும்.

மாணவிகள் காவல் உதவி செயலியை தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்வதை அனைத்துக் கல்லூரிகளும் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

ரூ.3.10 கோடியில் 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - 4 முடிவுற்ற திட்டப் பணிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

கோவை, டிச.29- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 5 புதிய திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 4 முடிவுற்ற திட்ட பணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்திற்குபட்ட பகுதிகளில் ரூ.3.10கோடி மதிப்பீட்டில் 5 புதிய திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 4 முடிவுற்ற திட்ட பணிகளை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி. கேத்ரின் சரண்யா, திருப்பூர் மண்டலக்குழு தலைவர் பத்பநாபன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காணியப்பன், ஒன்றியகுழு உறுப்பினர் ஜோதிபாசு சோலப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.விசாலாட்சி காணியப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சிவ ராமகிருஷ்ணன், ஊராட்சி செயலாளர் கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜென்கின்ஸ், மோகன் பாபு மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு வளர்ச்சித்திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கிடு செய்து, அத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். நமக்கு நாமே திட்டம் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டது. உருவாக்கின்ற திட்டம் மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்படும் என்ற நோக்கத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

மக்களின் பாதுகாப்புக்கு எண்ணற்ற திட்டங்கள்!

குறிப்பாக மகளிருக்கு நகரப்பேருந்துகளில் கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி, நகைக் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, வருமுன் காப்போம் திட்டம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், சர்க்கரை நோயாளிகள், இரத்த அழுத்தம், முடக்குவாதம் உள்ளிட்ட நோய்களுக்கு வீடு தேடி 60 நாட்களுக்கு ஒருமுறை மருந்துகள் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2கோடியே 1வது பயனாளிக்கு ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருந்து பெட்டகத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். பேருந்துவசதிகள் இல்லாத கிராமத்தில் இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. 108 ஆம் புலன்ஸ் திட்டம் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 48 மணிநேரத்திற்கான மருத்துவ செலவினை அரசை ஏற்றுக்கொள்ளும் உயிர்காக்கும் 48 திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இதுபோன்று மிகவும் பயனுள்ள பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள்.

கொங்கு மண்டலத்திற்கான திட்டங்கள்!

கொங்கு மண்டலத்தின் முக்கிய பாசன திட்டமான பரம்பிகுளம் ஆழியாறு திட்டம், தமிழ்நாடு அரசு மற்றும் கேரளா அரசு ஒப்பந்தமிட்டு திட்டம் உருவாக்கப்பட்டது. நல்லாறு திட்டம் நிறைவேற்று குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் கேரளா மாநில முதலமைச்சருடன் பேசியுள்ளார்கள். தேவையான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பற்றாகுறையாக இருக்கின்ற நீரினை பெற்று நம்முடைய பகுதிகளில் பாசனங்களை மேம்படுத்தவதற்கு தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

பல்வேறு திட்டங்கள்!

தொடர்ந்து, பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும்பணி, ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதலாக ஆறு புதிய வகுப்பறைகள் கட்டும்பணி, ரூ. 12.30 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியை அமைக்கும் பணி, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 9.66 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி, கிருஷ்ணா கார்டன் சக்தி நகர் பகுதிகளில் ரூ.62.20 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.57 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அடிக்கல் நாட்டி, சோலபாளையத்தில் ஊராட்சியில் கனிமம் மற்றும் சுரங்க நிதியின் கீழ் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒன்றிய துவக்கப்பள்ளி, ரூ.11.33 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம், MGNREGS திட்டத்தின் கீழ் ரூ.9.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை, சந்திராபுரத்தில் ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை என மொத்தம் ரூ.53.15 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

தருமபுரி கிழக்கு மாவட்டம், எட்டியாம்பட்டி கிராமத்திலிருந்து மேல்மருவத்தூருக்கு ஆன்மீக பயணம் சென்ற பேருந்து ஊத்தங்கரை அருகே விபத்துக்கு உள்ளானது, விபத்தில் படுகாயமடைந்தவர்கள், அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர். தகவல் அறிந்த தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி அவர்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன், மாணவர் அணி அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன், தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஸ்டாலின் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.பி. முனுசாமி

டிசம்பர் 29 (2016)

கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட தருமபுரி மாவட்ட அவைத்தலைவராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1980ல் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், விவசாய வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநராகவும், நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.